**18TAP14**

# PSG COLLEGE OF ARTS & SCIENCE
(AUTONOMOUS)

## MA DEGREE EXAMINATION MAY 2022
(Fourth Semester)

Branch – **TAMIL**

**TAMIL MOZHI VARALAARUM DRAVIDAMOZHIKALIN OPPILAKKANAMUM**

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ

பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக. (10 x 1 = 10)

1 திராவிட மொழிகளுள் அதிக ஒலிகளைக் கொண்ட மொழி எது?
(அ) குடகு (ஆ) தோடா
(இ) இருளா (ஈ) கோண்டி

2 பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தான் பகுதியில் பேசப்படும் திராவிட மொழி எது?
(அ) கோயா (ஆ) பார்ஜீ
(இ) பெங்கோ (ஈ) பிராகுயி

3 தமிழ் மலையாளம் தெலுங்கு கன்னடம் ஆகிய நான்கு மொழிகளும் ஒரே மொழிக்குடும்பத்தைச் சார்ந்தவை என முதன் முதலில் கூறியவர் யார்?
(அ) எல்லீஸ் (ஆ) கால்டுவெல்
(இ) சோம்ஸ்கி (ஈ) கென்னத்பைக்

4 திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலைக் கால்டுவெல் எந்த மொழியில் எழுதினார்?
(அ) இந்தி (ஆ) தமிழ்
(இ) சமஸ்கிருதம் (ஈ) ஆங்கிலம்

5 சங்கம் என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்திய தமிழ் இலக்கியம் எது?
(அ) கம்பஇராமாணம் (ஆ) சிலப்பதிகாரம்
(இ) மணிமேகலை (ஈ) சீவகசிந்தாமணி

6 திராவிடர்களின் புனிதமான மொழி 'தமிழ்' எனக்கூறியவர் யார்?
(அ) சி.ஆர்.ரெட்டி (ஆ) அறிஞர் அண்ணா
(இ) வீரமாமுனிவர் (ஈ) மறைமலை அடிகள்

7 திராவிடம் என்ற சொல்லில் இருந்துதான் தமிழ் என்ற சொல் உருவானது எனக் கூறியவர் யார்?
(அ) புளூ.ம்பீல்டு (ஆ) கால்டுவெல்
(இ) சபீர் (ஈ) போயாஸ்

8 மொகஞ்சதாரோ ஹரப்பாவில் கண்டறியப்பட்ட மொழி திராவிட மொழீ என முதன் முதலில் கூறியவர் யார்?
(அ) எமனோ (ஆ) பரோ
(இ) ஹீராஸ் பாதிரியார் (ஈ) ஜி.யூ.போப்

9 இறையனார் களவியல் நூலுக்கு முதலில் உரை எழுதியவர் யார்?
(அ) நக்கீரர் (ஆ) இளம்பூரணர்
(இ) நச்சினார்க்கினியர் (ஈ) தெய்வச்சிலையார்

10 தொல்காப்பியர் காலம் எது?
(அ) முதற்சங்கம் (ஆ) கடைச்சங்கம்
(இ) இடைச்சங்கம் (ஈ) கிபி இரண்டாம் நூற்றாண்டு

**Cont...**

பகுதி - ஆ

**பின்வரும் வினாக்களுக்கு இரண்டு பக்க அளவில் விடை தருக** ( 5 x 7 = 35)

11 அ கிளை மொழியியல் (Dialectology) குறித்து விவரிக்க?

அல்லது

ஆ ஓரினமாதலைச் (Assimilation) சான்றுடன் விளக்குக?

12 அ சங்ககாலத் தமிழின் சிறப்பினைச்சுட்டுக?

அல்லது

ஆ நாயக்கர் காலத் தமிழ் மொழியின் தன்மையினைச் சான்றுகளுடன் விளக்குக?

13 அ ஒன்றாதல் (Merger) பிரிதல் (Split) – என்பன மொழியில் நிகழ்வதைச் சான்றுகாட்டி விளக்குக?

அல்லது

ஆ ஒப்பிலக்கண நெறிகள் குறித்து விளக்கி வரைக.

14 அ திராவிட மொழிகளில் சிறப்பாக இடம் பெற்றுள்ள சில ஒலி விதிகளைக் கூறி விளக்குக?

அல்லது

ஆ திராவிட மொழிகிளல் இ/எ, உ/ஒ அடையும் மாற்றங்கள் குறித்துச் சான்றுடன் விளக்குக.

15 அ திராவிடமொழிகளில் எண்ணுப்பெயர்கள் (Numbers) சுட்டுமாற்றை சான்றுகளுடன் விளக்குக.

அல்லது

ஆ சாரியைகள் (Empty Morphs) திராவிடமொழிகளில் இடம்பெறும் முறை குறித்து எழுதுக.

பகுதி - இ

**கீழ்க்காணு ம் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க** ( 3 x 10 = 30)

16 தமிழ்மொழியின் அமைப்பினையும் வரலாற்றினையும் கட்டுரை வடிவில் எழுதுக.

17 பிற்காலத் தமிழ் மொழியின் சிறப்பினைப் புலப்படுத்துக?

18 திராவிட மொழிகளின் ஒலி விதிகளையும் ஒலிச்சமன்பாடுகளையும் சான்றுகளுடன் விவரி.

19 தென், நடு, வட திராவிட மொழிகளின் சிறப்பியல்புகளை எடுத்துரைக்க.

20 பின்வருவனவற்றிற்குச் சிறு குறிப்பு வரைக.

அ) மூவிடப் பெயர்கள் (Pronouns)

ஆ) பால் (Gender)

இ) எண் விகுதிகள் (Number system)

ஈ) சுட்டுப்பெயர்கள் (Demonstratives)

உ) ஏவல் வினை (Imperative)

Z-Z-Z END